*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC.14/2022***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW– 1 (LW–1)***

*Name / Father's Name:* ***திருமதி.வெள்ளையம்மாள் க/பெ. தாண்டவராயன்***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **30.05.2025.**

துவக்க நேரம் 01.19 A.N

**அரசு தரப்பு வழக்கறிஞர் இல்லை என்றாலும் போலீஸ் பொறுப்பதிகாரியான திரு.சுரேஷ் அவர்கள் ஆஜராகியுள்ளார். அவர் முன்னிலையில் சாட்சி அடையாளம் காட்டப்பட்டு விசாரணை**

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது பெரியேரி கிராமத்தில் குடியிருந்து, விவசாய வேலை வருகிறேன். எதிரிகளை தெரியும், எனது உறவினர்கள் ஆவார்கள். தேதி, மாதம் நினைவில்லை. கடந்த சுமார் 4 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் எனது அண்ணனை, எங்களது பக்கத்து வீட்டுக்காரர்களான காசியம்மா, கோவிந்தராஜ் மற்றும் அவரது பிள்ளைகள் ஆகியோர் அடித்துக்கொண்டிருந்தார்கள்.

2) அன்றைய தினம் எனது மகள் நந்தினியை, கோவிந்தசாமி, காசியம்மாள், காசியம்மாளின் மகள் ஆகியோர் கையால் அடித்து எனது மகளை கீழே தள்ளிவிட்டார்கள். எனது மகன் தனசேகரை, எதிரிகள் ஆள்வைத்து அடித்தார்கள். அங்கிருந்த என்னை, கோவிந்தசாமியும், அவரது மனைவி காசியம்மாளும் என்னை கன்னம் கன்னமாக அடித்து காலால் உதைத்து தள்ளினார்கள். எனக்கு கீழே விழுந்ததில் தலையில் அடிபட்டது. அப்பொழுது

அங்க வந்த எனது மகன் தனசேகரை எதிரிகள் குச்சியால் அடித்தார்கள். எனது மகனிடம் இருந்த செல்போனை எதிரிகள் வைத்த ஆட்கள் அடித்து பிடுங்கிக்கொண்டார்கள்.

3) எதிரிகள், என்னை அடித்தபொழுது எனது கணவர் என்னுடன் இருந்தார். அவரையும் எதிரிகள் இடித்து கீழே தள்ளினார்கள். அதில் எனது கணவருக்கு காலில் அடிபட்டது. எதிரிகள், எங்களை நல்லாயிருக்கமாட்ட நாசமா போவடா, குட்டிச்சவரா போவிங்க, மன்னா போவிங்க என்று சொல்லி கெட்ட கெட்ட வார்த்தையால் அசிங்க அசிங்கமாக திட்டினார்கள். அடிபட்ட என்னையும், எனது மகனையும், எனது அண்ணன் பெரியசாமி ஆத்தூர் அரசு மருத்துவமனைக்கு 108 ஆம்புலன்ஸ் மூலம் அழைத்துவந்தார்.

4) என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது, ஆனால் போலிசார் என்னிடம் எந்த விவரமும் கேட்காமல் கையொப்பம் வாங்கினார்கள். **(புகார் வாக்குமூலத்தில் உள்ள புகார்தாரரின் கையொப்பம் மட்டும் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்யவில்லை.

**குறுக்கு விசாரணை**

எதிரிகள் ஆஜர். வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

முடிவு நேரம் 01.24 A.N

C UDAYASUNDARAM Digitally signed by C UDAYASUNDARAM Date: 2025.05.30 16:24:50 +0530

Judicial Magistrate No.2, Attur.

*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC.14/2022***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-2 (LW-3)***

*Name / Father's Name:* ***திரு.தனசேகரன் த/பெ. தாண்டவராயன்***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **30.05.2025.**

துவக்க நேரம் 01.25 A.N

**அரசு தரப்பு வழக்கறிஞர் இல்லை என்றாலும் போலீஸ் பொறுப்பதிகாரியான திரு.சுரேஷ் அவர்கள் ஆஜராகியுள்ளார். அவர் முன்னிலையில் சாட்சி அடையாளம் காட்டப்பட்டு விசாரணை**

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது சங்கராபுரம் வட்டம், செம்படாக்குறிச்சியில் குடியிருந்து, சின்னசேலத்தில் உள்ள பிராய்லர் கம்பெனியில் சூப்பர்வைசராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1, எனது தாயார். ஆஜர் எதிரிகளை தெரியும், எனது உறவினர்கள் ஆவார்கள். எங்களுக்கும், எதிரிகளுக்கும் இடையே இடம் சம்மந்தமாக பிரச்சனை இருந்து வந்தது.

2) கடந்த 28.08.2021 அன்று மாலை 06.00-07.00 மணிக்குள் எனது அம்மாவை, எதிரிகள் அடித்துவிட்டதாக எனது அப்பா செல்போன் மூலம் தகவல் சொன்னார். அதன் பின்னிட்டு இரவு சுமார் 09.0-10.00 மணியளவில் நான் ஊருக்கு வந்து, எதிரிகளிடம் ஏன் என் அம்மாவை அடித்தீர்கள் என்று கேட்டபொழுது எதிரிகள் அனைவரும், என்னை கை மற்றும் குச்சியால் அடித்தார்கள். அதில் எனக்கு இடது கண் புருவத்தில் அடிபட்டு சதை கிழிந்துவிட்டது. அங்கு வந்த எனது அப்பாவை, எதிரிகள் அடித்தார்கள். அதில்

எனது அப்பாவிற்கு காலில் அடிபட்டு இரத்தம் வந்தது. சண்டையின்போது எதிரிகள், எங்களை தேவடியா பையலே என்று அசிங்கமாக திட்டினார்கள். மேலும் எதிரிகள், உங்களை உயிரோடு விடக்கூடாது என்று மிரட்டினார்கள்.

3) அதன் பிறகு அடிபட்ட என்னையும், எனது அப்பாவையும், எனது மாமா பெரியசாமி ஆத்தூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு கொண்டுபோய் சேர்த்தார். இந்த சம்பவம் குறித்து போலிசார், என்னிடம் விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

எதிரிகள் ஆஜர். வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

முடிவு நேரம் 01.35 A.N

C UDAYASUNDARAM
Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2025.05.30 16:24:58 +0530

Judicial Magistrate No.2, Attur.

*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC.14/2022***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-3 (LW-4)***

*Name / Father's Name:* ***திரு.தாண்டவராயன் த/பெ. பெரியான்***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **30.05.2025.**

துவக்க நேரம் 01.36 A.N

**அரசு தரப்பு வழக்கறிஞர் இல்லை என்றாலும் போலீஸ் பொறுப்பதிகாரியான திரு.சுரேஷ் அவர்கள் ஆஜராகியுள்ளார். அவர் முன்னிலையில் சாட்சி அடையாளம் காட்டப்பட்டு விசாரணை**

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது சங்கராபுரம் வட்டம், செம்படாக்குறிச்சியில் குடியிருந்து, வயது மூப்பின் காரணமாக வீட்டில் உள்ளேன். அ.சா.1, எனது மனைவி. அ.சா.க 2 தனசேகரசன், எனது மகன். ஆஜர் எதிரிகளை தெரியும், எனது உறவினர்கள் ஆவார்கள். எங்களுக்கும், எதிரிகளுக்கும் இடையே இடம் சம்மந்தமாக பிரச்சனை இருந்து வந்தது.

2) எனது மனைவி கடந்த 26.08.2021 அன்று எங்களது பேரப்பிள்ளைகளை பார்ப்பதற்காக பெரியேரி கிராமத்திற்கு வந்தார். அதன் பிறகு 28.08.2021 அன்று எனது மனைவியை வீட்டிற்கு அழைத்துச்செல்வதற்காக நானும் பெரியேரி கிராமத்திற்கு வந்தேன். அன்று மாலை இரவு சுமார் 08.00 மணிக்கு நாங்கள் எங்கள் மகள் சாகேஷ்வரி வீட்டில் இருந்தபொழுது, எதிரி வீட்டில் இருந்த எதிரிகள் வீட்டு வாசலில் தண்ணீர் வந்து நின்றதற்காக எனது மகள் மற்றும் மனைவியிடம் வந்து சண்டை போட்டார்கள்.

3) பேசிக்கொண்டிருக்கும்பொழுதே எதிரி கோவிந்தராஜ், அவரது இரண்டு மகன்கள், மகள், அவரது மனைவி ஆகியோர்கள், எனது மனைவியை தெருவிற்கு இழுத்துச்சென்று அடித்துபோட்டுவிட்டார்கள், மேலும் கையாலும், காலாலும் அடித்து உதைத்தார்கள். எனது மனைவி மூச்சு பேச்சு இன்றி கீழே விழுந்துவிட்டார். அதன் பின்னிட்டு நானும், எனது மைத்துனர் பெரியசாமியும் ஓடிச்சென்று பார்த்தோம். அதன் பிறகு 108 ஆம்புலன்ஸ் மூலம் அடிபட்ட எனது மனைவியை ஆத்தூர் அரசு மருத்துவமனைக்கு எனது மைத்துனர் கொண்டுபோய் சேர்த்தார்.

4) அதன் பிறகு சின்னசேலத்தில் வேலை செய்து வந்த எனது மகன் தனசேகருக்கு, நான் போன் செய்து தகவல் சொன்னேன். எனது மகன் அன்று இரவு 09.00 மணியளவில் பெரியேரியில் உள்ள வீட்டிற்கு வந்தார். எனது மகனிடம் நடந்த சம்பவத்தை கூறினேன். எனது மகன் சென்று, எதிரிகளிடம் ஏன் என் அம்மாவை அடித்தீர்கள் என்று கேட்டபொழுது எதிரி கோவிந்தராஜ் இவனது அம்மாவை அடித்ததுபோல் இவனையும் அடிங்கடா என்று அவரது மகன்களிடம் கூறினார். எதிரி கோவிந்தராஜ், அவரது அண்ணன்கள் மற்றும் மாமனாருக்கு தகவல் சொல்லி வரவழைத்தார். அனைவரும் சேர்ந்து, எனது மகனை அடித்தார்கள்.

5) எதிரி கோவிந்தராஜ் குச்சியால், எனது மகனை குத்தினார், அப்பொழுது எனது மகனுக்கு கையில் அடிபட்டது. நான் சென்று மறுத்தபொழுது எதிரிகள், என்னையும் கீழே தள்ளி அடித்தார்கள். நான் தடுத்தபொழுது கோவிந்தராஜ், என்னை கீழே தள்ளி அடித்தார். அதில் எனக்கு இடதுகால் முட்டியில் அடிபட்டது. நான் கீழே விழும்பொழுது எனது சட்டைப்பையில் இருந்த செல்போன் கீழே விழுந்துவிட்டது. கோவிந்தராஜின் மாமனார், அந்த செல்லை எடுத்து அவரது மகனிடம் கொடுத்துவிட்டார். மேலும் என்னை, கோவிந்தராஜின் மாமனார் மிரட்டி அடித்தார். சம்பவத்தின்பொழுது எதிர் வீட்டுக்காரர்களும், பக்கத்து வீட்டுக்காரர்களும் பார்த்தார்கள். அடிபட்ட

நானும், எனது மகனும் மறுநாள் காலை ஆத்தூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்று சேர்ந்தோம். இந்த சம்பவம் குறித்து போலிசார், என்னிடம் விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

எதிரிகள் ஆஜர். வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

முடிவு நேரம் 01.49 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2025.05.30 16:25:06 +0530

Judicial Magistrate No.2, Attur.